| சாட்சி : PW 1<br>திரு. ராதா<br>த.பெ. கலியன் | அ.வ.எண். 234/2015 | 02.09.2025 |
|---|---|---|

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) வழக்கு தாக்கல் செய்த காலத்தில் வழக்கு 2வது அயிட்ட சொத்தாக புல எண்.53/1யை காட்டியிருந்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 மாதிரி வரைபடத்திற்கு விபரங்கள் சொன்னது யார் என்றால் நான் தான். எந்த ஆவணத்தின் அடிப்படையில் வா.சா.ஆ.2 மாதிரி வரைபடம் ஏற்படுத்தப்பட்டது என்றால் பழைய புல எண்.53/1ற்கு புதிய புல எண்.53/63 ற்கான பட்டாவை காண்பித்து வரையப்பட்டது.

2) வா.சா.ஆ.2 மாதிரி வரைபடத்தில் புல எண்.53/1ன் உரிமையாளராக பாதிரன் மற்றும் பலருக்கு பாத்தியப்பட்டதாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பலர் யார் என்றால் பாதிரன் உட்பட கூட்டுப்பட்டாவில் கண்ட 20 நபர்களுக்கு பாத்தியப்பட்டது. மேற்படி நபர்களை இவ்வழக்கில் நான் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

3) புல எண்.53/1என்ற ஒரு புல எண்ணே கிடையாது என்பதால் தான் நான் தாக்கல் செய்த இடைக்கால தடையுறுத்துக்கட்டளை மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான், பழைய புல எண் என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு சென்றேனா என்றால் செய்தேன். மேற்படி மேல்முறையீடும் தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான்.

4) வா.சா.ஆ 2 மாதிரி வரைபடத்தில் புல எண்.53/1என்பது தவறா, சரியா என்றால் சரியானது. வா.சா.ஆ.1 வம்சாவழிபட்டியலை நிரூபிக்க ஆவணங்கள் ஏதேனும் என் கைவசம் உள்ளதா என்றால் கூட்டுபட்டா

தான் ஆவணம். 3 முதல் 5 பிரதிவாதிகளின் வீடு எனது வீட்டிற்கு கீழ்பக்கம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 முதல் 5 பிரதிவாதிகளின் வீடு RCC ஒடு மெத்தை வீடு என்றால் சரிதான். புல எண்.53/72 ல் உள்ள சொத்து யாருடையது என்றால் சரிதான். அதில் உள்ள வீடு யாருடையது என்றால் என்னுடையது, கூரை வீடாக இருந்தது, தற்போது சீட் போட்டுள்ளேன்.

5) புல எண்.53/73 ல் உள்ள சொத்து யாருடையது என்றால் எனது மகன் அதில் உள்ளார். 3 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் என்ன என்றால் ராமசாமி. மேற்படி ராமசாமியும், எனது தகப்பனாரும் உடன்பிறந்த அண்ணன், தம்பி என்றால் சரிதான்.இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.702/2015 ன் மீதான மேல்முறையீடு CMA No.6/2018 ம் தள்ளுபடி செய்யப்பட்ட பிறகே பிராதில் மேற்படி புல எண்.53/1 என்பதே புல எண்.53/61 என்று மனு தாக்கல் செய்து திருத்தம் செய்தேன் என்றால் சரிதான்.

6) தற்போதும் புல எண்.53/1 என்ற எண் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி புல எண்.53/1ன் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் கிழமேல் 112 அடி, தென்வடல் 27 ஜாதியடி. வருவாய் துறை ஆவணங்களில் புல எண்.53/1ன் மொத்த விஸ்தீரணம் 1.54.0 ஹெக்டேர் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7) வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். புல எண்.53/1ன் மொத்த விஸ்தீரணம் 1.54.0 ஹெக்டேர் என்று நீ.சா.ஆ.3 ல் நீதிமன்ற ஆணையர்

அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நீ.சா.ஆ.3 ல் புல எண்.53/61 ல் உள்ள சொத்திற்கு மொத்தம் 28 நபர்கள் உரிமையாளர்கள் என்று ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். புல எண்.53/61 யை பொறுத்தே நான் இவ்வழக்கில் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருகிறேன் என்றால் சரிதான்.

8) மேற்படி சொத்திற்கு நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் நான் கோரும் நிலையில், மேற்படி சொத்திற்கு கூட்டுரிமையாளர்களான மீதமுள்ள 27 நபர்களை நான் ஏன் இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் யார் யார், எங்கு உள்ளனர் என்று எனக்கு தெரியாது. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் வழக்கு தபசில் 1 வது அயிட்ட சொத்திற்கு உரியது என்றால் சரிதான்.

9) ஆனால் நான் இவ்வழக்கில் 2 வது அயிட்ட சொத்திற்கு பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். 2 வது அயிட்ட சொத்து பாதை என்பதை காட்ட ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி பாதைக்கான நான மேற்சொன்ன கிழமேல், தென்வடல் அளவுகளை காட்ட ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது.

10) முதன்முதலாக வழக்கு சொத்தை ஆணையர் அளவீடு செய்த போது நில அளவையரோ, கிராம நிர்வாக அலுவலரோ வரவில்லை என்றாலும், ஆணையர் மட்டுமே வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்து நத்தம் வகைப்பாட்டை சேர்ந்தது என்றால் சரிதான். நத்தத்தில் உள்ள சொத்தை நில அளவையரோ, கிராம நிர்வாக அலுவலரோ இல்லாமல் நீதிமன்ற ஆணையருக்கு, வழக்கு சொத்தை எவ்வாறு அடையாளம்

காட்டினேன் என்றால் கூட்டுப்பட்டாவை வைத்து அடையாளம் காட்டினேன்.

11) கூட்டுப்பட்டாவை வைத்து நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அடையாளம் கண்டு கொண்டாரா என்றால் ஆமாம். எனது வீட்டின் கதவு எண்ணை நீதிமன்ற ஆணையரிடம் காட்டினேனா என்றால் இல்லை. முதன்முதலில் வழக்கு சொத்தை டேப் பிடித்து அளந்தது யார் என்றால் நீதிமன்ற ஆணையர்.

(மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கானது ஒத்திவைக்கப்படுகிறது)